DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.59/2026

PW - 5

| | | |
|---|---|---|
| Name | : | செந்தில்நாதன் (Lw - 5) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 14.05.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பளையபாளையத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மாமா ஆவார்.

கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது எனது பெரியம்மா மாராயி என்பவர் அவரது மகள், பேரன், மருகன் உடன் காரில் திருமணத்திற்காக சென்று கொண்டிருந்தபோது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டில் சந்திப்பில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் இடதுபுறமாக மேற்கு நோக்கி திரும்பிய போது எதிரி கவனக்குறைவாக வண்டியை ஓட்டியதாகல் கார் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் இருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. நான் உடனே விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது எனது அக்கா வீட்டுக்காரர் கண்ணன் மற்றும் அவரது மகன் கோகுல் ஆகியோரை காரில் இருந்து வெளியே எடுத்துவிட்டார்கள். எனது அக்காவையும் பெரியம்மாவையும் நாங்கள் தான் காரில் இருந்து வெளியில் வரவைத்தோம். எனது அக்கா பாரதிக்கு இடது கண்ணில் அடிபட்டு வீக்கம் இருந்தது. எனது பெரியம்மா மாராயிக்கு நெஞ்சு வலி இருப்பதாக கூறினார். மற்ற இருவருக்கும் அடிபடவில்லை. நான் எனது பெரியம்மாவை

108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் தர்ஷன் மருத்துவனைக்கு அழைத்து சென்ற ஸ்கேன் செய்து பார்த்துவிட்டு பின்பு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு எனது பெரியம்மா மாராயியை பரிசோதித் மருத்துவர்கள் எனது பெரியம்மா இறந்துவிட்டதாக கூறினார்கள். போலிசார் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**